Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    வைகாசி 8    (21 - 05 - 1992)    வியாழக்கிழமை    ஓசை: 3

## இரசாயனப் பொருள்களை அனுப்ப தடை விதிப்பு

யாழ். பல்கலைக் கழக மருத்துவப் பீடத்திற்கு கப்பல் மூலம் அனுப்பப்படும் 'இரசாயன மருந்துப் பொருள்களை' வட பகுதிக்கு கொண்டு செல்வதற்கு கூட்டுப்படைத் தலைமையலுவலகம் மீண்டும் தடை விதித்திருக்கின்றது. கடந்த காலங்களில் யாழ். பல்கலைக் கழகத்தின் தேவைகளுக்கென விசேட அனுமதியின் கீழ் பொருள்கள் அனுப்பப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இதே வேளை மருத்துவப் பீடத்திற்கு தேவையான சிலவகையான இரசாயனப் பொருள்களுக்கு முற்றாகப் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது இதனால் மருத்துவ பீட கற்கை நெறிக்கும் கஷ்ட நிலை தோன்றியுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 05)

### வீரச்சாவு

மேஜர் இளங்கோ



வற்றாப்பளை ஆலயத்தில் கடந்த திங்களன்று சிறிலங்கா இராணுவத்தால் ஏவப்பட்ட எறிகணையினால் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடை

# இந்தியாவின் தலையீடு குறித்து மேற்குலக நாடுகள் அதிருப்தி

## அரசியல் தீர்வுக்கு ஊறுசெய்யும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீது இந்தியா விதித்துள்ள தடையானது பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வுகாணும் வாய்ப்பிற்கு முட்டுக்கட்டையை ஏற்படுத்தியுள்ளதாக மேற்குலக ராஜதந்திர வட்டாரங்கள் கவலை தெரிவித்தன இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்பட வேண்டுமென மேற்குலக நாடுகள் சிறிலங்காவை வற்புறுத்தி வந்த வேளையில் இந்தியா மேற்கொண்ட இந் நடவடிக்கை இவ் வட்டாரங்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசும் யுத்த நிறுத்தம் செய்து நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டும் என, மேற்குலக நாடுகள் நீண்டகாலமாகவே சிறிலங்கா மீது அழுத்தம் போட்டு வந்தன இப்பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிப்பதற்கும் சில நாடுகள் முன்வந்தன. ஆனால், தமிழர் இனப் பிரச்சினையில், மேற்குலகம் தலையிடுவதையோ மத்தியஸ்தம் வகிப்பதையோ இந்தியா விரும்பவில்லை. ஏனெனில் இது விடுதலைப் புலிகளுக்கு ஓர் சர்வதேச அந்தஸ்தை வழங்குவதாக அமைந்து விடுமென இந்தியா அஞ்சியது.

அத்துடன் இலங்கை விவகாரத்தில் தான் அந்நியப்படுவதையும் தெற்காசியாவில் மேற்குலக நாடுகளின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துடன் மோதல்; போராளி வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் பாலம் போட்ட மடு என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினரும், ரெலோ தேசத் துரோகிகளும் மறைந்திருந்து தாக்கியதில் ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

நேற்று முன்தினம் காலை 5.45 மணியளவில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் இயக்க வேலை சம்பந்தமாக சென்று திரும்பிக் கொண்டிருக்கும் போது இந்த மோதல் இடம்பெற்றது.

இம் மோதலில் வீரச்சாவை தழுவிக்கொண்ட வீரவேங்கை ரஞ்சிசந்திரன் (தருமரட்ணம் ராஜ்குமார் கொம்மாதுறை, செங்கலடி, மட்டக்களப்பு) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## விண்ணப்பங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

குவைத், ஈராக் ஆகிய நாடுகளில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கான நிவாரண விண்ணப்பப்படிவங்கள் நேற்றைய தினம் தொடக்கம் யாழ். செயலக பரிபாலனக் கிளையில் வழங்கப்படுகின்றது

இவ் விண்ணப்பப்படிவங்கள் வார நாட்களிலுள்ள செயலகம் இயங்கும் நாட்களில் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது [பா]

## ஆலயம்மீது எறிகணை வீச்சு இந்துசமயப்பேரவை கவலை

(யாழ்ப்பாணம்)

வற்றாப்பளை அம்மன் கோவில் பொங்கல் உற்சவத்தில் கலந்து கொண்ட பக்தர்கள் மீது முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து கடந்த திங்கட்கிழமை கண்மூடித்தனமாக நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல் குறித்து இந்து சமயப் பேரவை அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்துள்ளது.

இந்துசமயப்பேரவை யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் பெளத்தர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந் நாட்டு அரசும், அரச படைகளும் பிறமதத்தவர்களை இம்சிக்கும் வகையில் நடந்து கொண்டமை இது முதல் தடவையல்ல. இந்துக் கோயில்களை அழிப்பதும் இந்துக் கோயில்களில் உள்ள விக்கிரகங்களை அகற்றுவதும், வழிபாட்டுரிமையை மறுப்பதும், இந்துக் கோயில்களில் இராணுவ முகாம்களை அமைப்பதும் சாதாரண நிகழ்வுகளாக அமைந்துள்ளன என்றும்,

இத்தாக்குதலினால் இறை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தென்கிழக்காசிய நாடுகளிடம் சிறிலங்கா அரசாங்கம் ஒத்துழைப்பு கோருகிறது

(கொழும்பு)

தென் கிழக்காசியா, மற்றும் தூரகிழக்கு நாடுகளிடமிருந்து சிறிலங்கா அரசு பொருளாதார ஒத்துழைப்பையும் வர்த்

யுள்ளார்.

தென்கிழக்காசியா மற்றும் தூரகிழக்கு நாடுகளின் தூதுவர்களை தனது அலுவலகத்திற்கு அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்திய போதே

## பேச்சுவார்த்தையை தடுப்பதே இந்தியாவின் நோக்கமாகும்

- திலகர்

(பாரிஸ்)

சிறிலங்கா அரசும் விடுத

லைப் புலிகள் மீது தடை உத்தரவைப் பிறப்பித்திருப்

அரசுக்கும் விடுதலைப் புலிக

## யாழ்.பல்கலைக் கழகத்தில் தொழிலாளர் கற்கைநெறி

சிறிலங்கா அரசு பொருளாதார ஒத்துழைப்பையும் வர்த்தக முதலீடுகளையும் எதிர்பார்த்திருப்பதாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறி வர்களை தனது அலுவலகத்திற்கு அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்திய போதே ஜனாதிபதி பிரேமதாசா இதனைத் தெரிவித்தார்.

## அரசாங்க ஊழியருக்கு 60 மாத சம்பள முற்பணம்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்கள் வீடுகள் அல்லது வாகனங்கள் வாங்குவதற்கு அறுபது மாத சம்பள முற்பணம் வழங்கப்படும் என்று சிறிலங்கா பிரதமர் டி. பி. விஜயதுங்கா அறிவித்துள்ளார்.

இதுகாலவரை மேற்படி தேவைகளுக்காக அரசாங்க ஊழியர்களுக்கு இருபத்தி நான்கு மாத கால சம்பளம் மட்டுமே முற்பணமாக வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது எனவும் அவர் கூறியுள்ளார்.

## உலர் உணவு நிவாரணம் மேலும் இருவாரம் நீடிப்பு

(குருநகர்)

இராணுவ முற்றுகையால் கடல் தொழில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு மேலும் இரு வாரங்களுக்கான உலர் உணவு நிவாரணம் வழங்கப் பட்டுவருகின்றன.

கடந்த வருடம் அக்டோபர் மாதம் மண்டைதீவு பூநகரி, கல்முனைப் பகுதிகளுக்கு சிறிலங்கா இராணுவம் வந்ததை அடுத்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை எட்டு வாரங்களுக்கான உலர் உணவு நிவாரணங்களே வழங்கப் பட்டிருக்கின்றன. (21)

## பயிற்சி நெறி

சிறுவர்களுக்கான வானொலி நிகழ்ச்சி தயாரிப்பவர்களுக்கும், ஆக்க கர்த்தாக்களுக்குமான பயிற்சிநெறி ஒன்று நிதர்சனம் நிறுவனத்தால் நடாத்தப்படவுள்ளது. பயிற்சிநெறி சிறுவர் கல்வி சம்பந்தப்பட்ட அறிஞர்களால் நடாத்தப்படும். பயிற்சியாளர்கள் பயிற்சி முடிவில் எம்முடன் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதில் ஒத்துழைக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விபரங்களையும் நிதர்சனம் செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் அனைத்தும் 1992 - 05 - 26 மாலை 5 மணிக்குப் பிந்தாது நிதர்சனம் செயலகத்தில் நேரில் கையளிக்கப்பட வேண்டும்.

'நிதர்சனம்'
தீப் வீதி,
திருநெல்வேலி.

[சி/4443]

(பாரிஸ்)

சிறிலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் நேரடிப் பேச்சுக்கள் நடத்தி இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதைத் தடுக்கும் நோக்குடனேயே இந்திய அரசு விடுதலைப் புலிகள் மீது தடை உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக விடுதலைப் புலிகளைச் சேர்ந்த திலகர் பாரிசில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; சர்வதேச சமூகம் சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே மத்தியஸ்தம் செய்து இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண விரும்பு

[4 ஆம் பக்கம் பார்க்க]

- திலகர்

## புலிகளுக்கு உதவுவோரும் தடை வரம்புக்குள் வருவர்

-- ஜேக்கப்

[சென்னை]

இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு, நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவி செய்யும் அமைப்புகளும் தடையின் வரம்புக்குள் வரும் என்று மத்திய உள்துறை இணை அமைச்சர் எம்.எம். ஜேக்கப் கூறியுள்ளார்.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும்கூறுகையில் இத்தகைய அமைப்புகளின் நடவடிக்கைகளை அரசு கண்காணித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கும் என்றும் விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக நேற்று நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது

இந்த வழக்கை விசாரித்த மத்திய புலனாய்வுத்துறையின் சிறப்புக் குழு இந்த வழக்கை விசாரிக்க அமைக்கப்பட்ட தனி நீதி மன்றத்தில் குற்றப் பத்திரிகையை பல்வேறு சட்டப் பிரிவுகளின் கீழ்தாக்கல் செய்தது.

குற்றம் சாட்டப்பட்ட 41 பேரில் 26 பேர் இலங்கைத் தமிழர்கள் 15 பேர் இவர்களது இந்திய ஒத்துழைப்பாளர்கள் என்று குற்றப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் முதலாவது குற்றம் சாட்டப்படுவராக இடம் பெறுகிறார் பொட்டம்மான், அகிலா ஆகியோர் முறையே இரண்டாவது, மூன்றாவது குற்றம் சாட்டப்பட்டவர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கதிரவெளியில் ராணுவ அட்டகாசம் 3 பொதுமக்கள் பலி; 4 பேர் கைது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு கதிரவெளி என்னுமிடத்தில் பொது மக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டில் மூன்று அப்பாவிப் பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அத்துடன் நான்கு பொதுமக்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு முகாமிற்கு கொண்டு செல்லப் பட்டனர்.

கடந்த ஏழாம் திகதி விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது நடாத்திய தாக்குதலின்பின் அவ்விடத்திற்கு வந்த சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமக்கள் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர்.

இத் துப்பாக்கி பிரயோகத்தில் செல்வம் பரமானந்தம் (வயது 35 திருமணமானவர், கட்டுமுறிப்பு மட்டக்களப்பு), கணேசன்சிவா (வயது28வெருகல், மூதூர்), கிருபா (வயது32

(4ஆம் பக்கம் பார்க்க]

## தொழிலாளர் கற்கைநெறி

யாழ் பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் கற்கை நெறிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு உயர்கற்கை நெறிக்கு வாய்ப்பளிக்கப்படுமென பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை பேராதனை பல்கலைக்கழகத்திலேயே 1974 இல் முதன் முதலில் தொழிலாளர் கற்கைநெறிக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. இதன் மூலம் அதிகபலனை அடைந்த தொழிலாளர் பலர் உயர் தொழிலில் தற்போது ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இத்துறையானது வேலைவாய்ப்புக்கு மட்டுமேயல்லாது பயன்படுத்தப்படாத மூலவளங்களை மேலும் மேலும் பயன்படுத்த வழிவகுக்கும் எனவும் அவர் தெரிவித்தார். ]05]

## முல்லைத்தீவு மக்கள் வங்கி புதுகுடியிருப்பிற்கு மாற்றம்

[புதுக்குடியிருப்பு]

முல்லைத்தீவு மாவட்டத்தின் மக்கள் வங்கிக் கிளையை மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இராணுவத்தினரின் பிடியில் சிக்கியிருந்த மேற்படி வங்கிக் கிளையின் ஆவணங்களும், தளபாடங்களும் தற்பொழுது மீட்கப்பட்டமையால் இவ் வங்கிக் கிளை மிகவிரைவில் புதுக்குடியிருப்பில் செயற்பட ஆரம்பிக்க இருக்கிறது.

மேற்படி வங்கிக் கிளையின் ஆவணங்களும் தளபாடங்களும் கடல் மார்க்கமாக திருக்கோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து தரை மார்க்கமாக வவுனியா ஊடாக புதுக்குடியிருப்பிற்கு எடுத்துவரப் பட்டிருக்கிறது.

இதனால் இவ் வங்கிக் கிளையை மீண்டும் செயற்பட வைப்பதற்கான சாத்தியக் கூறுகள் தோன்றியிருப்பதாக கூறப்படுகிறது. (க)

## இந்திய ராக்கெட் செல்வி நேற்று செலுத்தப்பட்டது

[டில்லி]

விண்வெளிக் கோள் செலுத்தும் உயர் சக்தி வாய்ந்த ராக்கெட்டான ஏ.எஸ்.செல்வி சிறிஹரிகோட்டா ஏவுதளத்திலிருந்து நேற்றுக் காலை ஆறுமணிக்கு செலுத்தி வைக்கப்பட்டது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட தகவல்களின் படி, 1987, 1988 ஆம் ஆண்டுகளில் ஏவப்பட்ட ராக்கெட்டுகளில் மாற்றங்கள் செய்யப்பட்டு ஏ.எஸ்.செல்வி உருவாக்கப்பட்டது என்றும், 100 கிலோ எடையுள்ள சாதனங்களை ஏற்றிச் செல்லும் என்றும், இதிலுள்ள சாதனங்கள் விண்வெளியிலுள்ள ஹாமாக் கதிர்களையும், அயன மண்டலத்தையும் ஆராயும் என்றும் தெரியவருகிறது 40 தொன் எடையுள்ள இந்த ராக்கெட் 150 கிலோகிராம் எடையுள்ள விண்வெளிக் கோள்களை குறைந்த தூரத்தில் பூமியைச் சுற்ற வைக்கும் சக்தியுடையதாக இருக்கும்.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

யாழ். பல்கலைக்கழக புவியியற் கழகத்தினரால் நடாத்தப்படவுள்ள ''சிலப்பதிகாரம் தந்த கோவலன்'' நாடகநிகழ்ச்சிக்கான 05 ஆம் இலக்க 50ரூ. Ticket புத்தகம் (காலைக் காட்சி 104 - 126 வரையான Tickets) தவறிவிட்டது. தயவு செய்து எடுத்தவர்கள் புவியியற்துறையில் ஒப்படைக்கவும்.
நன்றி -புவியியற் கழகத்தினர். (2586)

### ஆசிரியர் நியமனம்

வவுனியாவில் கலவரத்தினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்து பயிலுநர் ஆசிரிய பதவிக்கு விண்ணப்பித்த 22 பேருக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

### நிவாரணம்

சடற்றொழிலாளர் வலயங்களில் வதியும் சிகை அலங்கரிப்பாளர் குடும்பங்களுக்கும் உலர் உணவு நிவாரணம் வழங்க யாழ் அரச அதிபர் பணித்துள்ளார்.

வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தால் யாழ் அரச அதிபர், யாழ் உதவி அரச அதிபர்களுக்கு விண்ணப்பித்திருந்ததை அடுத்து நிவாரணம் வழங்க அரச அதிபர் அனுமதி வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)

### சிரித்திரன் வெளிவந்தது

பங்குனி, சித்திரை மாதங்களிற்குரிய சிரித்திரன் இதழ் வெளிவந்துள்ளது. இவ் இதழில் இளையவன் எழுதிய உயிரின் துடிப்பு, கரும்பறவையின் குரு (தி) ஷேத்திரம், வளவை வளவனின் முடத் தெங்குகள் ஆகிய ஆக்கங்களும் மற்றும் பல நகைச்சுவை துணுக்குகளுடன் கூடிய பல்வேறு அம்சங்களும் இம்மாத இதழில் வெளிவந்துள்ளன.

### இடி அமினுக்கு

டும் என்று நிர்பந்திப்பதாகச் சொல்லப்படும் கிசுகிசுவிற்கு அவர் சமீபத்தில் முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசுவை சந்தித்தது வலுசேர்த்திருக்கிறது.

ஜானகி ஆதரவாளர்கள் மீது மட்டுமல்ல அவரது வேலையாட்கள் மீதும் ஜெயலலிதாவின் கவனம் திரும்பியது நாற்பது வருடங்களுக்கும் மேலாக எம். ஜி. ஆரிடம் உதவியாளராக இருந்தவரும் எம்.ஜி.ஆர். நினைவு இல்லத்தை நிர்வகித்து வருபவருமான முத்து என்பவர் கஞ்சா வைத்திருந்ததாக கைது செய்யப்பட்டார். முத்து மீது ஜெயலலிதாவின் கோபத்திற்குக் காரணம் எம் ஜி ஆர் காலத்தில் நடந்த சம்பவங்கள் என்றும் அப்போது தனது தலைவரின் உத்தரவுப்படி முத்து ஜெயலலிதாவை வீட்டிற்கு உள்ளே விட மறுத்ததாகவும் பின் அவருடைய நடவடிக்கைகளைக் கண்காணித்து வந்ததாகவும் சொல்லப்படுகிறது.

#### எல்லோர் மீதும் தாக்கு

பட்ஜெட் கூட்டத்தொடரின் போது ஜெயலலிதாவின் கண்டனங்களுக்கு உள்ளாகாதவர்கள் எவருமே இல்லை. அதிகாரிகள் பத்திரிகையாளர்கள் மத்திய அரசு தோழமைக்கட்சியான காங்கிரஸ் எல்லோரும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று போதனைகள் செய்ய முற்பட்டார் ஜெயலலிதா இந்த விமர்சனத்திற்கு சங்கராச்சாரியார்கூட தப்பவில்லை.

மார்ச் 19-ம் தேதி சட்டமன்றத்தில் பேசும் போது ஜெயலலிதாவின் முதல் கணை அதிகாரிகள் மீது பாய்ந்தது. சரியான முறையில் நிர்வாகப் பணிகளைக் கவனிக்காத அதிகாரிகளை மாநிலத்தை விட்டே மாற்றவேண்டும் என்கிற ரீதியில் அவர் பேசினார். இதில் வேடிக்கை என்னவென்றால் அதிகாரிகள் அடிக்கடி மாற்றப்படுவதுதான் நிர்வாகம் சரிவர நடைபெறாமல் போக ஒரு காரணம். ஆறுமாதத்தில் தொழில்துறை நான்கு செயலர்களைக் கண்டிருக்கிறது. மின் வாரியமும் அப்படித்தான்.

அதிகாரிகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டதைப் போலவே, நூற்றாண்டு கண்ட பத்திரிகையான இந்து போன்ற பத்திரிகைகள் எப்படி செய்திப் வெளியிட வேண்டும் என்று பத்திரிகையின் பெயரைக் குறிப்பிடாமல் பேசினார். அவரது நடவடிக்கைகளை விமர்சிக்கும் பத்திரிகைகளுக்கு என்ன கதி ஏற்படும் என்பதை 'நக்கீரன்' பத்திரிகைக்கு ஏற்பட்ட அனுபவங்கள் காட்டுகின்றன. சுமார் ஒரு லட்சம் பிரதிகள் அளவில் விற்பனையாகும் நக்கீரன் வார இதழ் பலவிதங்களில் அச்சுறுத்தப்பட்டது. வழக்குகள் போடப்பட்டன. மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. கடைசியில் தமிழ் நாட்டின் பல பகுதிகளில், அதன் இதழ்கள் அ. இ. அ. தி. மு. க. வினரால் பறிமுதல் செய்யப்பட்டு எரிக்கப்பட்டன.

''இடிஅமீனுக்குப் பிறகு ஜெயலலிதா தான் சர்வாதிகாரி என்று நிரூபித்து வருகிறார். அப்படி ஆணவமாக ஆட்சிபுரிந்தவர்கள் அடைந்த கதியைத்தான் இவரும் சந்திப்பார்'' என்கிறார் நக்கீரன் ஆசிரியர் ராஜகோபால்.

மத்திய அரசைக் கூட அவர் விட்டு வைக்கவில்லை. கடந்த டிசம்பரில் காவிரி நீர் சம்பந்தமாக எழுந்த வன்முறையின் போது தமிழர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடுதர நீதிவிசாரணைக் கமிஷன் வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசு கண்டு கொள்ளவில்லை என்று குற்றம் சாட்டி அதை ஒரு முறைசாடினார் அதே சமயம் சில இ.காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்த்து விமர்சிப்பதை காங்கிரஸ் கட்சியின் தமிழகத் தலைவர்கள் தடுப்பதில்லை என்று அவர்களை பலமாக கண்டனம் செய்திருக்கிறார்.

நன்றி:-இந்தியா டுடே

### நாய்களுக்கு தடுப்பூசி

[பருத்தித்துறை]

வடமராட்சிப் பகுதியில் நாய்களுக்கான விசர் நோய்த் தடுப்பூசிகள் இலவசமாகப் போடப்பட்டு வருகின்றன. சுகாதாரத் திணைக்களமும், கால்நடை சுகாதார அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்தே நாய்களுக்கான இவ் இலவச நோய்த் தடுப்பூசிகளை ஏற்றி வருகின்றன.

தமது வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த்தடுப்பூசி போட விரும்புபவர்கள் தத்தமது பகுதி சுகாதாரப் பரிசோதகர்களுடனோ அல்லது பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி

---

### வரையறுக்கப்பட்ட கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம், மூளாய்

பதிவு இல. 83/4 04-1936.

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 1992ஆம் ஆண்டு ஆனி மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (14-06-92) காலை 9.30 மணிக்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் சமூகம் தருமாறு வேண்டுகின்றோம். 31-05-92க்கு முன் காரியாலயத்தில் கிடைக்கும் பிரேரணைகள் பரிசீலிக்கப்பட்டு பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

#### நிகழ்ச்சி நிரல்

1. இறைவணக்கம்

---

### செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார்

## ஆலய பெருவிழா

இம் மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகிய திருவிழா 25 ஆம் திகதி மாலை திருவழிபாட்டுடனும். 26 ஆம் திகதி காலை திருநாள் கூட்டுத் திருப்பலியுடனும் நிறைவு பெறவுள்ளது. பிரபல்யமான யாத்திரைத் தலங்களில் ஒன்றான செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் விழாவைச் சிறப்பிக்க ஆரம்ப நாளில் இருந்தே ''விசுவாச விழிப்புணர்வு'' என்ற மையக் கருத்தில் அருட்திரு ஜெ. இ. ஜெயசீலன் அடிகளார் மறையுரையாற்றி வருகிறார்.

பங்குக் குரவர்,
புனித அந்தோனியார் ஆலயம்,
தாளையடி.

[2884]

---

## தாதிப் பயிற்சி நெறி
## (Diploma in Nursing)

- ★ 6 மாதகால இலகு விரிவுரைகள்
- ★ பிரபல தகுதிவாய்ந்த வைத்தியர் குழு
- ★ பார்மஸி பயிற்சியுடன் கூடியது
- ★ இலவச ஆங்கில வகுப்புகள்
- ★ பிரபல வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சி
- ★ உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு

**ஆரம்பம் : 01-06-1992**

மேலதிக விபரங்களுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
GROUP
14, St. peter's lane, Hospital Road JAFFNA.

(சி 4441)

---

## International Association of Book - Keepers (LONDON)

★ Foundation
★ Intermediate
★ Final

'92 டிசம்பரில் நடைபெறவிருக்கும் மேற்படி பரீட்சைகளுக்கான வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

திங்கள், புதன் பிரிவு — 20.05.1992
சனி, ஞாயிறு பிரிவு — 23.05.1992

★ கடந்தகால பரீட்சைகளில் எமது நிறுவன மாணவர்களுள் 80% மேலானோர் சித்தியடைந்துள்ளனர்.

---

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீர ஜனனம்
12 - 07 - 1963

வீரச் சாவு
21 - 05 - 1985

குருநகரில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த

### லெப். வாசன்
(மாணிக்கவாசகர் குவீந்திரராசா)

மண்ணை மீட்டெடுத்து மக்களாட்சி
மாண்புடனே மலரவெனும்-எண்ணம்
கொண்டுழைத்தஉத்தமன் வாசன்
வண்ணமுடன் வாழ்வான் வரலாறாய்

புன்னாலைக் கட்டுவன் வடக்கு. - குடும்பத்தினர்

(சி 4442)

---

### அகதிகள் புனர்வாழ்வு நிதியம் -1983 அரசசார்பற்ற நிறுவனத்தால் வழங்கப்பட இருக்கும் சுயதொழில்வாய்ப்பு புனர்வாழ்வு

## உதவி

01.06.1990 - 31.05.1992 வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக கணவன்மாரை இழந்த அல்லது காணாமல் போய் இதுவரையும் சுயதொழில் வாய்ப்பு புனர்வாழ்வு உதவியை அரச அதிபரிடமிருந்தும் வேறு புனர்வாழ்வு நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளாத விதவைகள் எமது நிதியத்தில் உதவி கோரிய விண்ணப்பங்களை 31.05.1992 ற்கு முன் உரிய ஆவணங்களுடன் உங்களால் தயாரிக்கப்பட்ட முழுவிபரங்களடங்கிய விண்ணப்பப்படிவத்தில் சமர்ப்பிக்கும்படி கோருகிறோம்.

வ. பரமசிவம்
நிர்வாக பொறுப்பாளர்

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983
374, பருத்தித்துறை வீதி,
நல்லூர்
(சி/2585)

## நிகழ்ச்சி நிரல்

1. இறைவணக்கம்
2. கூட்ட அறிவித்தல் வாசித்தல்
3. தலைவர் உரை
4. சென்ற வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை
5. எண்பார்வை அறிக்கை (1990-1991)
6. மொத்தக்கடன் எல்லை, ரூபா 500000/- அங்கீகாரம்
7. தேநீர்ச்சாலை  8. பிரேரணைகள்
9. புதிய அங்கத்தவர் அங்கீகாரம்
10. பணிப்பாளர் சபை வெற்றிடங்கள் தெரிவு: சித்தங்கேணி 1, சுழிபுரம்-1, சங்கானை கிழக்கு மாதகல்-2, தொல்புரம்-1, மூளாய்1
11. இறைவணக்கம்.

குறிப்பு:- எண்பார்வை அறிக்கை (1990 - 1991) காரியாலயத்தில் பார்வையிடலாம்.

18-05-1992 நா. வேலுப்பிள்ளை,
(சி/4438) செயலாளர்

## அச்சகத்துறை
## மேற்பார்வை மட்டப் பணியாளர்

**தகைமை :**

அச்சக வேலைகளில் பூரணமான தேர்ச்சியும் அச்சகப் பகுதி நிர்வாகத்திலும், கணக்கு வைப்பு முறைமைகளிலும் போதுமான அனுபவமும்,

**மிற தகைமை :**

அடிப்படைக் கல்வியறிவுடன், 10 வருடங்களுக்கு குறையாத அச்சக வேலையிலான ஈடுபாடு.

**நேர்முகப் பரீட்சை :**

மேற்படி தகைமையுடையோர் 23 - 05 - 92 சனி காலை 11-00 மணிக்கு வேண்டிய சான்றிதழ்களுடன் இல. 499, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சமாசக் காரியாலயத்திற்கு சமுகம் தரவும்.

**சம்பளம் :**

கூட்டுறவுச் சங்க சட்டதிட்டங்களுக்கமைய வழங்கப்படும்,

பொதுமுகாமையாளர்
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்
(சி/4432) யாழ்ப்பாணம்.

விசர் நோய்த்தடுப்பூசி போட விரும்புபவர்கள் தத்தமது பகுதி சுகாதாரப் பரிசோதகர்களுடனோ அல்லது பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரியுடனோ தொடர்பு கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. [25]

### மியூனிச்சிற்கு புதிய விமானசேவை

எயர்லங்கா நிறுவனம் எதிர் வரும் ஒக்டோபர் தொடக்கம் மியூனிச் நகருக்கான புதிய விமான சேவையை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது இந்தச் சேவை கொழும்பு - டுபாய் - மியூனிச் - சூரிச் மார்க்கத்தில் இருக்கும் எனத் தெரிய வருகிறது.

இப்பொழுது எயர்லங்கா ஜேர்மனிக்கு வாராந்தம் மூன்று சேவைகள் நடாத்தி வருகிறது. இவை பிராங்போட் சூரிச், பேர்லின் ஆகிய விமான நிலையங்களுக்கானவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

### பல்கலை. மாணவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு

யாழ். பல்கலைக்கழக 1990-91 கல்வியாண்டு மாணவர்களுக்கான மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவு (BURSARY) இருவாரங்களில் வழங்கப்படும் எனத் தெரிய வருகிறது.

இவ்வுதவிப் பணக் கொடுப்பனவுக்குச் சகல பீடங்களில் இருந்தும் 297 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் மாதாந்தக் கொடுப்பனவு ஆனது அவர்களது பெற்றோர் பெறும் வருட வருமானத்தினாலேயே தீர்மானிக்கப்படுகிறது.

ஆகக் குறைந்த மாதாந்தக் கொடுப்பனவாக 550 ரூபாவும், ஆகக் கூடிய கொடுப்பனவாக 650 ரூபாவும் வழங்கப்படவுள்ளது. (05

★ கடந்தகால பரீட்சைகளில் எமது நிறுவன மாணவர்களுள் 80% மேலானோர் சித்தியடைந்துள்ளனர்.


★ லண்டன் நிறுவனத்துடனான பதிவுகள் எம்மால் மேற்கொள்ளப்படும்.

★ *Computer Basic, Short - Hand & Typing* வகுப்புகளும் நடைபெறுகின்றன.

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

*16, 3rd Cross Street Jaffna.*

(சி-4439)



## கம்பியூட்டர் கல்வி

- BASIC
- dBASE III +
- LOTUS 1-2-3
- WORD STAR
- PASCAL

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

23-05-92 (சனி, ஞாயிறு வகுப்புக்கள்)
25-05-92 (திங்., புதன், வெள்ளி வகுப்புக்கள்)

மேலதிக விபரங்களுக்கு:

## யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்

**சதாபொன்ஸ்**
அல்வாய் கிழக்கு, அல்வாய். 37, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
[சி/4440]

## நினைவு கூருகின்றோம்---
## 1992-05-21

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணம், குருநகர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -
**லெப். வாசன்** (மாணிக்கவாசகர் குவீந்திரராசா - புன்னாலைக்கட்டுவன் வடக்கு)

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு சந்திவெளிப்பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-
**2 ஆம் லெப். அலன்** (வேலாயுதம் மனோகரன்- சந்திவெளி, மட்டக்களப்பு)
**வரதன்** (வேல்நாயகம் - சந்திவெளி, மட்டக்களப்பு)

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - வந்தாறுமூலைப் பகுதியில், தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -
★ **வேலுச்சாமி சிவராசா** (மரப்பாலம், மட்டக்களப்பு)

1990 ஆம் ஆண்டு நீர்வேலியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த
**பபி** (சுப்பையா விக்கினேஸ்வரன் - இருபாலை கிழக்கு, கோப்பாய்)

1991 ஆம் ஆண்டு தச்சன்காட்டில் சிறிலங்காப்படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -
**கிரிதரன்** (முத்துலிங்கம் கேதீஸ்வரன் - விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4436)

### சிந்தனைக்கு

தோல்வி உற்றவர்களுக்கு வரலாறு சொல்வது பாவம் பரிதாபம். ஆனால், உதவவோ மன்னிக்கவோ இயலாது.

- வைஸ்டன் ஹியூ ஆடன்

ஈழநாதம்

81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 21-05-1992
தொலைபேசி
ஆசிரிபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 85

## மீண்டும் இந்தியா தோல்வியுறுவது நிச்சயம்

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்து, சட்டவிரோதமான இயக்கம் என இந்தியா தடைசெய்ததுடன், கொழும்பை புலிகளுக்கு எதிரான நடவடிக்கையைத் துரிதப்படுத்துமாறு இராஜதந்திர அழுத்தமும் கொடுக்க முற்பட்டுள்ளமை இந்தியா மீண்டும் இலங்கை விவகாரத்தில் நேரடித் தலையீடு செய்ய முற்படுவதாகவே கருதலாம்.

இந்திய இராணுவம் 1990 இல் இலங்கையைவிட்டு வெளியேறியதிலிருந்து இலங்கை விவகாரத்தில் நேரடி தலையீட்டைத்தவிர்த்து வந்துள்ள இந்தியா மீண்டும் புலிகளின் தடையுடன் பிரசன்னமாகியுள்ளது. அதேவேளை இந்தியா மீண்டும் கடந்த காலத்தில் தோல்வி கண்ட இராஜதந்திர அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது ஆச்சரியமாகவுள்ளது.

1987 ஆம் ஆண்டு இந்தியா இலங்கை விவகாரத்தில் நேரடியாகத் தலையிட்ட போது விடுதலைப்புலிகளை முற்றாக அழித்து விடுவதிலேயே கவனம் செலுத்தியது. இதனை இந்திய இராணுவத்திற்கு தலைவர் பிரபாகரனை அழித்துவிட உத்தரவு இடப்பட்டதில் இருந்தே புரிந்து கொள்ளலாம். ஆனால் அன்று விடுதலைப்புலிகளின் பண்பும் அவர்களின் செல்வாக்கும் இந்தியாவிற்கு தெரியாமல் இருந்திருக்கலாம். அல்லது தெரிந்திருந்தும் புலிகளை வெற்றிகொண்டுவிடலாம் என நம்பிக்கை கொண்டிருக்கலாம்.

ஆனால் இன்று நிலைமை அவ்வாறில்லை. விடுதலைப் புலிகளின் தோற்றம் பற்றியும், குண நலன்கள் பற்றியும், அவர்களின் இலட்சிய உறுதி பற்றியும் இந்திய இராணுவ அதிகாரிகளே பல புத்தகங்களை எழுதியுள்ளனர். இப் புத்தகங்களில் கடந்த காலத்தில் இலங்கை தொடர்பாக இந்திய அரசு கடைப்பிடித்த கொள்கைகளைக் கண்டித்துள்ளனர். இராணுவத்தை அரசியல்வாதிகளும் இராஜதந்திரிகளும் தவறான வழியில் இட்டுச்சென்றமையே தமது தோல்விக்குக் காரணம் எனத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, புலிகள் பற்றியும், ஏனைய தமிழ்க் குழுக்கள் பற்றியும் சரியான கணிப்பீடு ஒன்றையும் செய்துள்ளனர். புலிகளின் தோற்றம் பற்றிக் குறிப்பிட்ட லெப். ஜெனரல் திபேந்திரசிங் "நீண்ட காலமாக ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் போராட்டத்தின் பெறுபேறாக விடுதலைப் புலிகள் இயக்கம் முகிழ்ந்து எழுந்தது எனவும், போற்றத்தக்க செயல்களைச் சாதிக்கக் கூடியவர்கள் எனவும், வாழ்க்கைப் போராட்டத்தில் மிகவும் துன்பப்படும் தமிழர்களின்

# தேசிய இனங்களின் போராட்ட வரலாற்றை சிங்களவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்

தேசிய சிறுபான்மை இனமொன்று தமக்கென தனியான இறைமையுள்ள அரசை அமைக்க வேண்டும் என்று குரலெழுப்புவது இன்று புதிய விடயமல்ல. இது மிகப்பழையது. பிரித்தானியாவிலுள்ள அரசாங்கங்களும் மக்களும் இது பற்றி நன்கு அறிந்துள்ளனர். பிரிட்டனில் வாழும் இலங்கையர்களில் பலருங்கூட 1600ஆம் ஆண்டு முதல் ஒற்றையாட்சியின் கீழேயே பிரிட்டன் ஆளப்பட்டு வந்தது என்பதை நன்கறிவர்.

தாம் வாழும் தீவில் தமக்கென ஒரு தனியரசை அங்கீகரிக்க வேண்டும் என்று அயர்லாந்து மக்கள் நீண்ட காலம் கோரி வந்தனர். ஆனால் பதவிக்கு வந்த பிரிட்டன் அரசுகள் எல்லாம் இதனை நிராகரித்து வந்திருந்தன

இதன் விளைவாக ஏற்பட்ட கெரில்லாப் போரானது 1922ஆம் ஆண்டில் அயரிஷ் தனிக் குடியரசாக (இப்போதைய அயரிஷ் குடியரசு) அங்கீகரிக்கப்படும் வரையில் தொடர்ந்தது இதன் மூலம் பிரிட்டனின் ஒற்றையாட்சி முறை தகர்ந்து இரு அரசுகள் ஏற்பட்டது.

இங்கு 1922ஆம் ஆண்டில் பிரிட்டன் இருந்த நிலையை மீட்டுப் பார்ப்பது பயனளிக்கும். அப்போது உலகிலேயே பேரரசு ஒன்றின் தாயாக பிரிட்டன் விளங்கியது. தொழில்துறையில் முன்னேற்றமடைந்த ஒரு நாடாக விளங்கியது. முதலாம் உலகப் போரில் வெற்றி வாகை சூடியிருந்தது.

அயர்லாந்தை தனிமாநிலமாக அங்கீகரித்து சமாதானத்தை ஏற்படுத்த பிரிட்டன் அரசு எடுத்த முடிவு என்பது அயரிஷ் கெரில்லாக்களிடம் பிரிட்டன் இராணுவ ரீதியாக தோல்விகண்டதால் எடுக்கப்பட்டதல்ல. மாறாக, வளர்ந்துவரும் தேசிய வாத உணர்வலைகளை ஆயுதம் தாங்கிய அடக்குமுறையின் மூலம் கட்டுப்படுத்த முடியாது என்பதால் எடுக்கப்பட்டது - எழுபது ஆண்டுகளுக்கு பின்னர் பிரிட்டன் இப்போது ஸ்கொட்டிஷ்காரர்களிடமிருந்து எழுந்துள்ள இதே போன்ற கோரிக்கைக்கு முகங்கொடுக்க வேண்டிய ஏற்பட்டுள்ளது. தனித்துவமான - இறைமையுள்ள - முழுமையான தனி

ரங்கமான முறையில் வாதப் பிரதிவாதங்கள் எழுப்பப்படுவதைசட்டங்கள் எதுவும்தடுப்பதாகவும் இல்லை.

அண்மையில் நடந்துமுடிந்த பிரிட்டன் பொதுத் தேர்தலிலும் கூட ஸ்கொட்லாந்தின் நிலவுகிறது.

முந்நூறு ஆண்டுகளுக்கும் மேலாக அயரிஷ் போராட்டத்தை அடக்க பிரிட்டன் கைக்கொண்ட முயற்சிகள் இன்னமும் வெற்றியடையவில்லை. பங்களாதேசத்தின் தேசிய டோம்.

விடுதலை அடைந்ததிலிருந்து இதுகாறும் நடந்தவற்றிற்காக மனம்வருந்தாத இதே வேளை வெறுப்பும் வன்மமும் தான் வளர்ந்துள்ளது. உலகம் முழுவதிலும்- கேள்விக்கு இட-

நான்கு ஆண்டு காலமாக பிரிட்டன் ஒரு கெரில்லாப் போரை நடத்தி வருகிறது. அங்கு நூறுபேருக்கு ஒருவர் என்ற விகிதத்தில் பிரிட்டன் இராணுவம் இருந்த போதும் வெற்றியடைய முடிய வில்லை.

பிரித்தானிய படையினர் மீது தாக்குதல் நடத்தும் அயரிஷ் கெரிலாக்கள் வடக்கு அயர்லாந்திலிருந்து பிரிட்டன் படைகளை விரட்டுவதும், அயர்லாந்துதீவு முழுவதையும் ஒரே நாடாகப் பிரகடனம் செய்வதையுமே தமது இலக்காகக் கொண்டுள்ளனர். இப்போராட்டகாலம் முழுவதிலும் பிரிட்டன் படைகள் புதுப்புது வழிகளைக் கைக்கொண்டும், நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தியும், கெரில்லா எதிர்ப்புப்போரில் புதுப்போர் உத்திகளைக் கடைப்பிடித்தும் கூட அயரிஷ் கெரில்லாக்களை அழித்துவிட முடியவில்லை. அவர்களின் செயற்பாடுகளைத் தடுக்கவும் முடியவில்லை.

இராணுவத்திற்கு தேவைப்பட்ட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்ட நிலையிலும் கூட இந்தப் போருக்கு ஒரு முடிவு அண்மைய எதிர்காலத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

சிறீலங்காவைப் பொறுத்த வரை இராணுவத்திற்கும் போராளிகளுக்கும் இடையிலான விகிதாசாரம் 10 : 1 எனலாம். போர் நடத்தப்படும் இடத்தின் தன்மைகள் ஒப்பிட்டுக் கூறமுடியா விட்டாலும் வடக்கு அயர்லாந்தைக் காட்டிலும் போராளிகளுக்கு சாதகமானதாகும். அத்துடன் விடுதலைப்புலிகள் அயர்லாந்து குடியரசு இராணுவத்தை விடவும் சர்வதேச ஆதரவையும், வலைப்பின்னலான தொடர்புகளையும்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் இராணுவ ரீதியாகவிடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதற்கோ அல்லது அவர்களை ஆயுதங்களைக் கைவிடச் செய்வதற்கோ, எடுக்கப்படும் முயற்சி வெற்றி பெறவேண்டுமானால், இப்போது செய்யப்படுவதை விடவும் பெருத்த முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டியிருக்

## அதிகாரப் பரவலாக்கல் செய்வது பிரிவினையை மழுங்கடிக்கும்

விடுதலைக் கோரிக்கை ஒரு முக்கியமான விவகாரமாக பேசப்பட்டது. இந்தப் பிரச்சினை தொடர்பாக முன்னணி அரசியல்கட்சிகளான தொழிற்கட்சியும், கன்சர்வேட்டிவ் கட்சியும் வெவ்வேறான கருத்துக்களையே கொண்டிருந்தன.

தேர்தல் பிரசாரத்தின் போது தொழிற்கட்சி அதிகாரப் பரவலாக்கல் மூலம் ஸ்கொட்லாந்து பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது. கன்சர்வேட்டிவ் கட்சி இதை எதிர்த்தது. ஸ்கொட்லாந்துவிற்கு அதிகாரப்பரவலாக்கல் செய்வது தவிர்க்க முடியாமல் ஸ்கொட்லாந்தின் விடுதலைக்கும், ஐக்கிய இராச்சியத்தின் பிளவிற்கும் இட்டுச் செல்லும் என்று கூறியது.

கன்சர்வேட்டிவ் கட்சியைப் பொறுத்த வரையில் ஐக்கிய இராச்சியம் இன்றுள்ள அதே நிலையில் பேணப்பட வேண்டும் என்று விரும்புகிறது அதே வேளை ஸ்கொட்லாந்து மக்களின் நலன்களைப் பேணுவதன் ஊடாக அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்று அது கருதுகிறது எப்படியிருப்பினும் பிரதமர் ஜோன்மேயர் ஸ்கொட்லாந்து மக்கள் விரும்பினால் முழு விடுதலையைப் பெறவும் பிரிந்து செல்லவும் தடையாக இருக்கப் போவதில்லை என்று தெளிவாக அறிவித்தார்.

பரந்த ஐக்கிய இராச்சியம் பற்றி எண்ணம் பிரிட்டனில் வாழும் 56 மில்லியன் மக்களில் பலருக்கு உண்டு ஆனால், ஸ்கொட்லாந்துக்காரர்கள் பிரிவினை கோருவதற்காக அவர்கள் அடக்கப்படவேண்டும் என்று ஒரு மனிதரும் கூறவில்லை.

பிரிட்டனில் வாழும் இலங்கையர்களும் கூட இந்தப் பொதுவான நிலைப்பாட்டிற்குள்

எழுச்சி விடுதலையாகப் பரிணாமம் பெறுவதை பலம் வாய்ந்த பாகிஸ்தானிய இராணுவத்தால் தடுக்க முடியவில்லை

இத்தகைய அடக்குமுறைப் போக்குகள் பயனளிக்கவில்லை என்பதற்கும் இன்றும் பல உதாரணங்களைக் காட்ட முடியும். இருபதாம் நூற்றாண்டின் வரலாறு எழுதப்படும் போது 1917 ல் சோவியத் யூனியன் மலர்ந்த புரட்சிக்கு கிடைக்கும் முக்கியத்துவத்தை விட அதிகமாக 1922-ல் பிரிட்டனை இரு கூறாக்கிய அயரிஷ் தேசிய வாதம் வரலாற்றில் முக்கியத்துவம் பெறக் கூடும்

> "அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்வது இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையும் அதே வேளை தனி அரசுக்கான போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்யும் என்று லண்டனிலிருந்து அதிரியன் விஜயமான என்பவர் டெயிலி நியூஸ் (12. 05. 1992) இதழில் எழுதியகட்டுரையின் மொழியாக்கம்.

அயரிஷ் விடுதலை தான் காலனித்துவ ஆட்சி முறை வழக்கொழிவதற்கான முன்னோடி எனலாம் இரண்டாம் உலகப் போரின்பின் காலனித்துவ நாடுகள் பலவும்விடுதலை பெற்றுள்ளன.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த நாம் அதுபற்றிய நினைவுகளை மீட்டுப் பார்க்க வேண்டும். படிப்படியாக வெற்றியடைந்த

மற்ற வகையிலும் முழு விடுதலை என்பது வரவேற்கப்பட வேண்டியதே.

தேசிய உணர்வோடுஎழுச்சி பெறும் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலைவழங்குவதால், தனியான, சுதந்திரமான, இறைமையுள்ள அரசிற்கான கோரிக்கைகளை அவர்கள் கைவிடக் கூடும் இதனால் சிங்களவராகிய நாம் சிறிது விட்டுக்கொடுக்க வேண்டும்.

ஆனால் பிரித்தானிய கன்சர்வேட்டிவ் கட்சிஸ்கொட்லாந்து பிரிவினையைப் பொறுத்த வரை அதிகாரப்பரவலை ஒரு தந்திரோபாயத்தை கருதிச் செயற்படவில்லை. சிறிலங்காவைப் பொறுத்த வரையில் பிரச்சினையானது அதிகாரப் பரவலாக்கல் என்ற கட்டத்தைக் கடந்து விட்டது. ஏனெனில் தமிழ் மக்கள் ஆயுத பாணிகளாக இருப்பதுடன் ஆயுதப்போராட்டமொன்றையும் நடத்தி வருகின்றனர். இரண்டு இராணுவ அமைப்புக்கள் செயற்படும் போது ஒற்றையாட்சி என்பது இல்லை என்றாகிறது. ஒரு நாட்டில் ஓர் இராணுவ அமைப்பு தான் இருக்க முடியும் என்பது தவிர்க்கமுடியாத தேவையாகும்.

தமிழ்மக்களின் ஆயுதம்தாங்கிய பாதுகாவலனாக இருக்கும் விடுதலைப் புலிகளை ஆயுதங்களைக் கைவிட இணங்கச் செய்ய வேண்டும் அல்லது இராணுவ ரீதியாக தோற்கடிக்க வேண்டும். இந்த நம்பிக்கை இப்போது சாத்தியமாகப் போவதில்லை, ஏனெனில் ஜனநாயக ரீதியில்பெறப்பட முடியாத பலவிடயங்களை ஆயுதப் போராட்டம் சாத்தியமாக்கியிருக்கிறது என்பதை அவர்கள்கண்டுள்ளனர். உதாரணமாக : தமிழ் மொழி சிங்களம், ஆங்கிலம் என்பவற்றுடன் சம அந்தஸ்தை மீளப்பெற்றுக்

தின் பெறுபேறாக விடுதலைப் புலிகள் இயக்கம் முகிழ்ந்து எழுந்தது எனவும், போற்றத்தக்க செயல்களைச் சாதிக்கக் கூடியவர்கள் எனவும், வாழ்க்கைப் போராட்டத்தில் மிகவும் துன்பப்படும் தமிழர்களின் பாதுகாவலனாக விடுதலைப் புலிகள் உள்ளார்கள்'' என்றும் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று, இன்னொரு இராணுவ அதிகாரியான மேஜர் அர்ஜுன் கட்டோசு, தமிழ்மக்களுக்கும்-சிங்களவருக்கும் இடையில் உள்ள பிரச்சினையின் அடிப்படையைச் சரியான முறையில் தொட்டுக் காட்டியுள்ளார். அவர், ''தமிழருக்கும், சிங்களவருக்கும் இடையிலான போர் நிலத்தின் மீதான ஆதிக்கம்'' எனக் குறிப்பிட்டுள்ளார். அதாவது, விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்திற்காகப் போராடுகின்றார்கள் என்பதைத் தெளிவாக வெளிக்காட்டினார்.

இதேவேளை, ஏனைய தமிழ்க் குழுக்கள் பற்றியும் இவ் இராணுவ அதிகாரிகள் சுட்டிக் காட்டத் தவறவில்லை. ''எந்தக் குறிக்கோளுமற்ற, கட்டுப்பாடு இல்லாத, சந்தர்ப்பவாதம் மிகுந்த கோழைத்தனமும், ஊழலும், கொடூரமும் நிறைந்த தமிழ்க் குழுக்கள்'' என லெப். ஜெனரல் சர்தேஷ் பாண்டே குறிப்பிட்டுள்ளார். திரு. சர்தேஷ் பாண்டேயின் இக்கணிப்பீட்டை அன்று இந்திய இராணுவத்துடன் சேர்ந்திருக்கும்போதும், இன்று சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்திருக்கும் போதும் இத்தமிழ்க் குழுக்கள் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றன.

ஆனால், தற்பொழுது விடுதலைப் புலிகளைத் தடை செய்துவிட்டு, இலங்கை அரசியலில் கூடுதல் அக்கறை காட்டத் தொடங்கியுள்ள இந்திய அரசு, கடந்த காலத்தில், இலங்கையில் தனக்கு ஏற்பட்ட அநுபவத்தைத்தானும் கருத்திற் கொள்ளவில்லை. கொழும்பிலுள்ள கையாலாகாத தமிழ்க் குழுக்களை வைத்துக் கொண்டு பிரச்சினையைத் தீர்த்து விடலாம் என எண்ணுகிறது.

இந்தியாவின் இந் நோக்கைச் செயற்படுத்துவதில், தமிழ்க்குழுக்களும் ஈடுபட்டுள்ளமை தெளிவாகத் தெரிகிறது. இதுவரையும், பிரேமதாசா அரசாங்கத்தைச் சார்ந்திருந்த தமிழ்க்குழுக்கள், தற்பொழுது தமக்குள் ஓர் உடன்பாடு கண்டுள்ளன. இந்தியாவில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கொழும்பு திரும்பிய பின்னரே இவ் உடன்பாடு காணப்பட்டது. அத்தோடு, இப்புதிய கூட்டணியினர் பாராளுமன்றத் தெரிவுக் குழுவையும் புறக்கணிப்பதாக தீர்மானமும் நிறைவேற்றியுள்ளனர். இவை யாவற்றிற்கும் இந்தியாவின் பின்னணி என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், யதார்த்தத்தைப் புறக்கணித்த இந்தியாவின் இவ் அணுகுமுறை ஒருபோதும் வெற்றி அளிக்கப் போவதில்லை. கள நிலவரங்களையும், கடந்த காலப்படிப்பினையையும் உணரமறுக்கும் இந்திய இராஜ தந்திரம் இலங்கையில் மீண்டும் ஒரு தோல்வியைத் தழுவிக் கொள்வது தவிர்க்க முடியாததாகிறது.

கைக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. தனித்துவமான - இறைமையுள்ள - முழுமையான தனி நாடொன்றை அமைக்க வேண்டுமென ஸ்கொட்டிஷ் தேசியக்கட்சியான எஸ்.என்.பி. கோரி வருகின்றது.

இது பலராலும் குறிப்பாக பிரிட்டனில் வாழும் இலங்கையர்களாலும் கூட ஏற்கப்படுகின்றது. இவ்வாறான ஒரு கோரிக்கையை எழுப்புவதற்கு ஒரு அரசியல் கட்சிக்குரிய உரிமை அங்கீகரிக்கப்படுகின்றது.

அரசியலமைப்புத் திருத்தத்தின் வாயிலாக இவ்வாறான கோரிக்கை கட்டுப்படுத்தப்படவில்லை. மேலும், இத்தகைய கோரிக்கைகள் மீது பகிதரும் கூறவில்லை.

பிரிட்டனில் வாழும் இலங்கையர்களும் கூட இந்தப் பொதுவான நிலைப்பாட்டிற்குள் உட்படுகின்றனர். தாங்கள் இப்போது வாழும் நாடு இரண்டாகப் பிளவுபட்டு இரண்டு தனித்தனி இறைமையுள்ள நாடுகளாக மாறுவது பற்றி ஆழமாகவும் தெளிவான அமைதியோடும் சிந்திக்க இங்குள்ள ஒவ்வொருவராலும் இயலுகின்றது.

இத்தகையதொரு நிலையானது சிறிலங்காவிற்கு பொருத்தமானதாக இல்லாமலிருக்கிறது இங்கு முதலாவது பரவலான கணிப்பு தமிழ்த் தேசியவாதம் என்பது ஆயுத முனையில் இராணுவரீதியாக அடக்கப்படவேண்டும் என்றே

பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த நாம் அதுபற்றிய நினைவுகளை மீட்டுப் பார்க்க வேண்டும். படிப்படியாக வெற்றியடைந்த ஒவ்வொரு அரசியல் அமைப்பு சீர்திருத்தங்கள் மூலமும் உள்ளூர் அரசியல் வாதிகளுக்கு அதிகாரமும், பொறுப்புகளும் வழங்கப்பட்டன. இதனால் தேசிய உணர்வு அலைகளை எழுப்பும் ஆரவாரங்களிலிருந்து அவர்கள் அமைதிப்பட்டு மனத்திருப்தி அடைந்ததைக் காணலாம்.

முற்று முழுதான விடுதலை என்பதுவே எமது முழுவிருப்பமாக இருந்தது. இந்த விருப்பமானது எமது நற்பண்பாக கருதப்பட அது பற்றி குற்றவுணர்விலும் பார்க்க நாம் பெருமைப்பட்டுக் கொண்

டனர் அவர்கள் கண்டுள்ளனர். உதாரணமாக: தமிழ் மொழி சிங்களம், ஆங்கிலம் என்பவற்றுடன் சம அந்தஸ்தை மீளப்பெற்றுக் கொண்டதும் வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒரே மாகாணமாக இணைத்ததையும் குறிப்பிடலாம்.

இந்நிலையில் இராணுவ ரீதியாகத் தோற்கடிப்பதுதான் ஒரே வழி எனக்கருதப்படலாம். ஆனால் இது முழு அளவில் அமுல் நடத்தப்படுமென்றோ, சிறிலங்கா நிலைமையில் பரவலான ஆதரவைப் பெறும் என்றோ தோன்றவில்லை.

பிரிட்டனின் நிலையை மீண்டும் ஒருமுறை மீட்டுப் பார்ப்பது பொருத்தமுடையது. வடக்கு அயர்லாந்தில் கொரில்லாக்களுடன் கடந்த இருபத்து

க்கப்படும் முயற்சி வெற்றி பெறவேண்டுமானால், இப்போது செய்யப்படுவதை விடவும் பெருத்த முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும். இதற்கான விலை பொருளாதார மற்றும் உயிரிழப்பு என்பனவற்றோடு மட்டும் நின்றுவிடாது அரசியல் ரீதியான பெரும் அழிவுக்கும் இட்டுச் செல்லும்.

இத்தகைய பெரிய விலை செலுத்தப்பட்ட பின்னரும் கூட வெற்றி பெறப்பட முடியுமா என்பதும் சந்தேகத்திற்கு உரியதே.

நன்றி: டெய்லி நியூஸ்:

12-05-1992

# 'இடி அமினுக்கு பின்னர் ஜெயலலிதா'

கோட்டையிலும் போயஸ் தோட்டத்திலும் ஏகப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் புடைசூழ அமர்ந்திருக்கும் ஜெயலலிதா. சமீபகாலமாக ஒரு தாக்குதலை துவக்கியிருக்கிறார். மகாமகச் சாவுகள், அவரது நிறுவனம் ஜெயா பப்ளிக்கேஷன்ஸ் நிலம் வாங்கியது தொடர்பாக எழுந்த குற்றச்சாட்டுக்கள் இவை காரணமாக அவரது புகழ்மீது விழுந்திருக்கும் கருநிழலைக் களைய நடத்தப்படும் தாக்குதல் அது. அவரது கோபக்கணைக்கு இலக்காகியிருப்பவர்கள் ஜானகி ஆதரவாளர்கள்- காஞ்சி சங்கராச்சாரியார், பத்திரிகைகள், மத்திய அரசு, தோழமைக் கட்சி இ. காங்கிரஸ் அதிகாரிகள், அத்துடன் அவரது கோபத்திற்கு நிரந்தரமாக ஆளான முன்னாள் முதல்வர் முத்துவேல் கருணாநிதி.

## வீரப்பன் வீசப்பட்டார்

ஜெயலலிதாவின் முதல் தாக்குதல் பெப்ரவரியில் துவங்கியது. குறிவைக்கப்பட்டவர்கள் அவரது சொந்த அமைச்சர்களே. அவருடைய பழைய வைரி ஆர். எம். வீரப்பனிடம் இருந்த கல்வி இலாகா திடீரென்று பறிக்கப்பட்டு அவரிடம் அதிக அதிகாரம் இல்லாத குறைந்த நிதி ஒதுக்கீடு கொண்ட பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் நலத்துறை தரப்பட்டது

வீரப்பனுக்கும் ஜெயலலிதாவிற்கும் இடையே இருந்து வரும் பகைபழையதை ஆனால் ஜெயலலிதா பழையதை சுலபத்தில் மறந்துவிடுகிற ரகமல்ல. வீரப்பனிடம் சமரசம் செய்து கொண்டதைப்போல வெளியே காட்டிக்கொண்டாலும் பகிரங்கமாக அவரை மட்டந்தட்ட ஜெயலலிதா நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். திராவிட இயக்கங்களுக்குச் செல்வாக்குத் தேடித்தந்த, தமிழ் மக்களுக்குப்பிரியமான விஷயமான தமிழ் வளர்ச்சியைப் பற்றி வீரப்பன் பொது மேடைகளில் பேசி வந்தது குறித்து எரிச்சலடைந்த ஜெயலலிதா, ஜனவரியில் வீரப்பனிடமிருந்து தமிழ் வளர்ச்சித் துறையைத் தன் வசம் எடுத்துக்கொண்டார்.

அதன்பின், சென்னை கிறிஸ்



தவக் கல்லூரி விவகாரத்தில் பிரச்சினைகள் வெடித்தன. ஆசிரியர்கள் போராட்டம் நடத்தப்போவதாக ஒரு புறமும், சிறுபான்மை வகுப்பினர் ஒன்று பட்டு அரசிற்கு சவால்விடுவது மறுபுறமும் நெருக்க, சிக்கலான சூழ்நிலை உருவானது இதே சமயம் தமிழ் நாட்டில் உள்ள கத்தோலிக்கப் பள்ளிகள், தங்களது கோரிக்கைகளுக்காக ஒரு நாள் பள்ளியை மூடத் தீர்மானித்தன. பிரச்சினைகளை வீரப்பன் தன் கவனத்திற்கே கொண்டு வராமல் முற்ற விட்டதால் ஜெயலலிதா அவர்மீது சினம் அடைந்ததாக போயஸ் தோட்டத்து வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வீரப்பன் அ.இ.அ.தி.மு.க.வின் அதிகார பீடத்தில் இருந்து தூக்கி அடிக்கப்பட்டார்.

## வஞ்சம் தீர்ப்பு

ஜெயலலிதாவின் அமைச்சரவை மாற்ற நடவடிக்கைகளில் ஒரு திட்டமிட்ட நோக்கம் இருந்ததை அரசியல் பார்வையாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள் முதல் பலிகா ராசாராம். ஜானகி ஆதரவாளரான இவரிடம் இருந்து உணவுத் துறை பறிக்கப்பட்டு முதல்வரின் விசுவாசியான ஜி விஸ்வநாதனிடம் கொடுக்கப்பட்டது. அடுத்து எலெக்ட்ரானிக்ஸ் இரும்பு மற்றும் உருக்கு ஆகிய துறைகளின் பொறுப்பிலிருந்து முத்துசாமி விடுவிக்கப்பட்டார். கட்சி உடைந்த நாளிலிருந்தே ராசாராம் வீரப்பனோடு முத்துசாமியும் ஜானகியின் தீவிர ஆதரவாளர்களுள் ஒருவர் என்பதை வைத்துப் பார்க்கும்போது இந்த மாற்றங்கள் ஒன்றும் தற்செயலாக நேர்ந்தவை அல்ல எனப் புரியும். முத்துசாமியிடம் இருந்து எடுக்கப்பட்ட முக்கியமான இரும்பு மற்றும் உருக்குத்துறை எஸ். கண்ணப்பன் வசம் தரப்பட்டதும் தற்செயல் அல்ல. போக்குவரத்துத் துறை அமைச்சர் செங்கோட்டையன், உள்ளாட்சித் துறை அமைச்சர் அழகு திருநாவுக்கரசு, கண்ணப்பன் மூவரும் அ.இ.அ.தி.மு.க. வின் அதிகார மும்மூர்த்திகள்.

ஜெயலலிதாவின் இந்தப் பதவி இறக்க நடவடிக்கைகளை தனது கணவர் எம்.ஜி.ஆரின் நினைவை மறக்கடிக்கச் செய்யும் முயற்சி என்று கருதும் ஜானகி அவற்றைக் கவனித்துக் கொண்டு இருக்கிறார் ஜெயலலிதாவின் எதிர்ப்பாளர்கள் ஜானகி மீண்டும் அரசியலில் இறங்க வேண்

[2ஆம் பக்கம் பார்க்க]

ஈழநாதம்

# பாதிக்கப்பட்ட சிறார்களை பராமரிப்பது எமது கடமை

## - செஞ்சோலை செயற்திட்ட பொறுப்பாளர் ஜனனி

இராணுவ நடவடிக்கையின் மூலம் தமிழீழத்தின் எல்லாப் பகுதிகளிலும் பல்லாயிரக் கணக்கான இளம் சிறார்கள் பராமரிப்பு அற்றவர்களாக் கப்படுகிறார்கள். இவர்களது வாழ்க்கை எதிர்காலத்தில் மூழ்கடிக்கப்படுகிறது. எனவே இச்சிறார்களை இனம் கண்டு பராமரிப்பது எமது கடமையாகும்.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று நண்பகல் நடைபெற்ற அனைத்துப் பீட மாணவர்களுக்கான கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி செஞ்சோலை செயற்திட்ட பொறுப்பாளர் ஜனனி கூறினார்.

கடந்த வருடம் ஆடி மாதம் 10 ஆம் திகதி நமது தலைவர் வே. பிரபாகரனால் உருவாக்கப்பட்ட இச் செயற்திட்டத்தில் தற்போது 76 பெண் குழந்தைகளை பராமரித்து வருகிறோம். எதிர்காலத்தில் இத்திட்டத்தினை பாரிய அளவில் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

எனவே இக் குழந்தைகளின் வளர்ச்சிக்கு நிதி சேகரிப்பதற்காக யாழ். மாவட்டம் பூராகவும் 'இசை நிகழ்ச்சி' நடாத்தவுள்ளோம் என்றார்.

பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சேகர் தலைமையில் இடம் பெற்ற இக் கூட்டத்தில் ஜனனி மேலும் உரையாற்றுகையில்.

ஆறரை ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் செஞ்சோலை செயற்திட்டத்தில் பாடசாலை, நூலகம், உள்ளக விளையாட்டு, வீட்டுத்தோட்டம், மாடுவளர்ப்பு மற்றும் ஏனைய பாரிய திட்டங்களுடன் நடத்தப்பட்டுவருகிறது என்றார்.

பாதிக்கப்பட்ட குழந்தைகளது நலனை எவ்விதத்திலும் பாதிக்காத வண்ணம் நாம் மேற்கொண்டுவரும் நடவடிக்கையானது எதிர் காலத்தில் சிறந்த செல்வங்களை உருவாக்கும் என்றார்.

அடுத்த வாரமளவில் செஞ்சோலை செயற்திட்ட சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டியும் நடைபெறவுள்ளதாக மேலும் தெரிவித்தார். (05)

## செஞ்சோலை பாடசாலை விளையாட்டுப் போட்டி

சண்டிலிப்பாய் செஞ்சோலை மகளிர் பாடசாலை திடகள விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 1 30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

த. வி. பு. மகளிர் படைப் பிரிவுத் தளபதி செல்வி ஜெயா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

## அழுகிய நிலையில் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(குருநகர்)

அழுகிய நிலையில் காணப்பட்ட ஆணின் சடலம் ஒன்றை நேற்று காலை சண்டிலிப்பாய் கல்வளை வழுக்கையாறுக்கு அண்மையில் உள்ள வயல் கிணறொன்றில் இருந்து சங்கானை காவல்துறையினர் மீட்டெடுத்தனர்.

அடையாளம் காணப்படாத மேற்படி சடலத்தில் நீலக் கோடுகள் உள்ள சறம், சேட் என்பன காணப்பட்டதாக காவல் துறையினர் தெரிவித்தனர்.

ஏறத்தாழ 40 வயது மதிக்கத்தக்க அச்சடலம் பிற்பாடு சங்கானைக் காவல் துறையினரால் யாழ். போதனாவைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21)

## நாளை பரிசளிப்பு விழா

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு உற்பத்தி எழுச்சி வாரத்தில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்புவிழா நாளை வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவட்டச் செயலக மாவீரர் கலையரங்கில் நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவின் போது வழங்கப்படஉள்ளது என தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது.

## பிரதேச ரீதியாக மாவீரர் நினைவுக் கூட்டம்

பங்குனி, சித்திரை, வைகாசி மாதத்தின் பிரதேச ரீதியான மாவீரர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டம் இன்று (வியாழன்) இரவு 7-30 மணிக்கு நல்லூர் பிரதேச திருநெல்வேலி பாரதிபுரம் பாற்பண்ணையடி

சித்திரை, வைகாசி மாதத்தின் பிரதேச ரீதியான மாவீரர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் 26-ம் திகதி அன்று இரவு 7-30 மணிக்கு உடுவில் பிரதேச இணுவில் சிவன் கோவில் முன்றலிலும் 28-ம் திகதி அன்று இரவு 7-30

பேச்சு வார்த்தையை

## நல்லூர்வாசி கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் வைத்து நல்லூர் வாசி ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். தற்போது இவருக்கும் புலிகளுக்கும் இடையிலான தொடர்புகள் பற்றி பொலிசார் விசாரித்து வருவதாகவும், புறக்கோட்டை பகுதியிலிருக்கும் மல்வத்தை வீதியில் இவர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

## விடுதலைப்புலிகள்

மொத்தம் குறிப்பிடப்பட்ட 41 பேரில் 12 பேர் உயிரிழந்து விட்டார்கள்.

உயிரிழந்த 12 பேரில் 10 பேர் இலங்கைத் தமிழர் இருவர் இந்தியப் பிரசைகள்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப் பத்திரிகை மொத்தம் 279 பக்கங்களைக் கொண்டுள்ளது. ராஜீவ் காந்தி கொலையை விடுதலைப் புலிகள்தான் சதிசெய்து திட்டம் தீட்டி நடத்தி முடித்தது என்று இந்தக் குற்றப் பத்திரிகை கூறுகிறது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாகியவேளையில் டில்லிக்கு அழைத்துவரப்பட்ட திரு. பிரபாகரன் தாம் அவமானப்படுத்தப்பட்டதாகவும் தனது விருப்பத்திற்கு மாறாக இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

திலீபன் மரணமும் விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரமூட்டியதாக இந்தக் குற்றப் பத்திரிகை கூறுகிறது 1987 இறுதிவாக்கில் இலங்கையில் வடகடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 17 மூத்த விடுதலைப் புலிகளை கொழும்புக்கு கொண்டுசெல்ல வேண்டாம் என்று விடுதலைப் புலிகளின் கோரிக்கையை அப்போதைய இந்தியப் பிரதமமந்திரி ராஜீவ் காந்தி ஏற்றுக் கொள்ளவில்லை.

இவர்களில் 12 பேர் சயனைட் விசமருந்தி தற்கொலை செய்துகொண்டார்கள் இதுவும் விடுதலைப் புலிகள் தலைமையை ஆத்திரமடையச் செய்தது.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இலங்கை அரசுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் எதிராக ஆயுதப்போர் நடாத்தப்போவதாக புலிகளின் தலைவர் பிரபாகரன் பகிரங்க அறிவிப்பொன்றைச்செய்தார்.

இத்தனைக்கும் மேலாக அமைதிப்படையின் கொடுமைகள் என்று விடுதலைப் புலிகள் வர்ணித்த சில குற்றச் சாட்டு

தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பிய

# அகதிகள் நிலை குறித்து ஐ.நா. அதிகாரிகள் ஆராய முயற்சி

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பிய அகதிகளிற்கான புனர்வாழ்வுத் திட்டங்கள் குறித்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலய அதிகாரிகள் யாழ். அரசாங்க அதிபருடன் பேச்சு வார்த்தை நடாத்த உள்ளனர்.

தற்போது கொழும்பில் தங்கியிருக்கும் அரச அதிபரும் மேற்படி அதிகாரிகள் குழுவினரும் இன்று சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

நாடு திரும்பிய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மக்களின் இருப்பிட வசதி மற்றும் உணவு, தொழில் முயற்சி, கல்வி வசதி போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து இருதரப்பினரும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள இருக்கின்றனர்.

அதேவேளை யாழ் செயலகம், மாவட்டத்திற்குள் நுழைந்த அகதிகளின் விபரங்களை சேகரிப்பதில் தீவிர முயற்சி எடுத்து வருகிறது. கிராம சேவகர்கள் ஊடாக மேற்படி தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான அறிவித்தல் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

குழு இந்த நோக்கத்துடன் இந்தியாவிற்குவந்தது ராஜீவ் காந்தியின் சிறிபெரம்புதூர் நிகழ்ச்சி பற்றி 1991 மே 19 ஆம் திகதி தெரிந்து கொண்ட சிவராசனும் மற்றவர்களும் மே 0 ஆம் திகதி பாக்கியநாதனின் வீட்டில் கூடி கொலைத் திட்டத்தின் இறுதிக்கட்டத்தை முடிவு செய்தார்கள் எனவும் குறிப்பிடுகிறது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்க தென்னை பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் பொதுமுகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 23-ம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் கூட்டுறவுக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சங்கங்களின் தலைவர்கள் பொது முகாமையாளர்களை தவறாது சமூகம் கொடுக்கும்படி யாழ். மாவட்ட கூட்டுறவு பதிவாளர் கேட்டுள்ளனர். (ரப)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

சர்வதேச இளைஞர் தொடர்பு பாசறையும் இளைஞர் மகாநாடும்

நோர்வே, ஜப்பான், தாய்லாந்து - 1992

மேற்படி இளைஞர் தொடர்பு பாசறையிலும், இளைஞர் மகாநாட்டிலும் பங்கு பற்றுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கனிஷ்ட இளைஞர் (15 - 17 வருடம்) 1 ஆண் 1 பெண் = 2 அங்கத்தவர்கள்
2. சிரேஷ்ட இளைஞர் (18-25 ,, ) 1 ஆண் 1 பெண் — 2 ,,
3. ஆசிரியர் (ஆதரவு)/ தலைவர் (26-45வருடம்) ஆண் அல்லது பெண் 1 அங்கத்தவர்

அ. தகுதிகள்:- 15 - 17 வருடம் (கனிஷ்ட) இளைஞர் அங்கத்தவர்
1. ஆண் அல்லது பெண்
2. 1ம் ஜூன் 1992ல் 18 வயதிற்கு மேற்படாமலும் 15 வயதிற்குக் குறையாமலும் இருத்தல்.
3. 1991 செஞ்சிலுவைச்சங்க அங்கத்தவராக இருப்பதுடன் 1992 ஆம் ஆண்டு இளைஞர் அங்கத்தவ அட்டையும் வைத்திருத்தல் வேண்டும்.
4. பின்வரும் துறைகளில் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.
   அ. அடிப்படை முதலுதவி.
   ஆ. அனர்த்தங்களுக்குத் தயாரிப்படுத்தல்
   இ. தலைமைத்துவப் பயிற்சி
   ஈ. ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு
5. சமூக சேவையில் பங்குபற்றி இருத்தல் வேண்டும். அங்கத்துவ நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருத்தல் 1991
6. பேச்சு, நடனம், நாடகம், இசைக்கருவிகள் இசைத்தல் துறையில் ஆற்றல் உடையவராக இருத்தல் வேண்டும்.
7. ஆங்கிலத்தில் வாசிப்பு, பேச்சு, எழுத்து ஆற்றல் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
8. தேகசுகம் உள்ளவராக இருத்தல் வேண்டும். முன்பு செஞ்சிலுவைச்சங்க அங்கத்தவராக வெளிநாடு செல்லாதவராக இருத்தல் வேண்டும்.

ஆ. (18-25 வருட (சிரேஷ்ட) இளைஞர் அங்கத்தவர்
1. ஆண் / பெண்
2. 01 - 06 - 1992 ல் 18 வயதிற்குக் கீழ்ப்படாமலும் 25 வயதிற்கு மேற்படா

...துள்ளது.

## பேச்சு வார்த்தையை

கிறது. ஆனால் இந்திய அரசு சர்வதேச சமூகம் இப்பிரச்சினையில் சம்பந்தப் படுவதை விரும்பவில்லை. பல மேற்கு நாடுகள் இலங்கை இனப்பிரச்சினையில் மத்தியத்துவம் செய்ய முன்வந்துள்ளன, மத்தியத்துவம் செய்ய முன்வரும்படி விடுதலைப் புலிகள் சில நாடுகளைக் கேட்டுள்ளனர். ஆனால் இந்தியாவின் போக்கு வேறாக உள்ளது. இவ் விடயத்தில் தான் மட்டுமே அதிகாரம்செலுத்துவதற்காக தன் பலத்தைக் கொண்டு வற்புறுத்தி வருகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

## இந்தியாவின்

செல்வாக்கு அதிகரிப்பதையும் இந்தியா விரும்பவில்லை மேலும் தமிழரின் இனப்பிரச்சினை தன்னாட்சி உரிமை பிரச்சினையாக சர்வதேச அரங்கில் மேடை ஏறுவதையும் இந்தியா விரும்பவில்லை.

இவற்றுக் கெல்லாம் முட்டுக் கட்டை போடும் எண்ணத்துடனேயே இந்தியா அவசரப்பட்டு புலிகள் மீதான தடையை விதித்திருப்பதாக மேற்குலக இராஜதந்திர வட்டாரங்கள் கருதுகின்றன.

...மூன்) இரவு 7-30 மணிக்கு நல்லூர் பிரதேச திருநெல்வேலி பாரதி புரம் பாற்பண்ணையடியிலும், எதிர்வரும் 24-ந் திகதி அன்று இரவு 7-30 மணிக்கு கோப்பாய் பிரதேச நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும் நினைவஞ்சலிக் கூட்டங்கள் இடம் பெறவுள்ளன.

## புலிகளுக்கு

தடையினை அமுல்படுத்துவது தொடர்பாக பரிசீலனை செய்ய குழுவொன்று அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும் விடுதலைப்புலிகள் மீதான தடையுத்தரவை எவரும் ஒருதலைப்பட்சமாகவோ அரசியல் பழிவாங்கல்களுக்காகவோ பயன்படுத்துவதைத் தடுப்பதை இக்குழு உறுதிசெய்யும் என்றும் தெரிவித்தார்.

மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில் விசேட புலனாய்வுக் குழுவின் விசாரணைகள் முடிவடைந்துள்ளதாகவும் குற்றப்பத்திரிகை தயாரிக்கும் வேலைகள் நடைபெறுவதாகவும் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதும் தலைவர் பிரபாகரனை ஒப்படைக்கும்படி வெளியுறவுத்துறை மூலம் இலங்கை அரசைக் கேட்டுக் கொள்வதற்கு உள்துறை அமைச்சு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

## நினைவூட்டுகிறோம்

மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட நிரந்தர போக்கு வரத்து அனுமதி அட்டைகள்யாவும் இம்மாதம் 31 ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும். மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள போக்கு வரத்து அனுமதி வழங்கும் காரியாலயத்தை நாடவும்.

[சி-4421]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மகேந்திரா வதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992ஆம் ஆண்டு மேமாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

...உடுவில் பிரதேச இணுவில் சிவன் கோவில் முன்றலிலும் 28-ம் திகதி அன்று இரவு 7-30 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவிலடியிலும் 30-ந் திகதி அன்று இரவு7-30 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச துர்க்காபுரம் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் இடம் பெறவுள்ளன.

## பொதுக்கூட்டம்

யாழ் வர்த்தகர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை காலை 9 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விசேட அழைப்பிற்கிணங்க யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி, தொழிற் சங்கப் பொறுப்பாளர் இயவன். யாழ் வட்டவைப் பொறுப்பாளர் இளங்கோ மற்றும் தொழிற் சங்க பிரிவைச் சேர்ந்த சுந்தரராஜா ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்.

அனைத்து வர்த்தகர்களும் கூட்டத்தில் பங்குபற்றும் பொருட்டு நாளை காலை வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருக்கும் என்று வர்த்தக சங்கத் தலைவர் க.வி. குலரத்தினம் தெரிவித்துள்ளார்.

## கதிரவெளியில்

கதிரவெளி மட்டக்களப்பு) ஆகிய 3 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

பின்னர் காத்தமுத்து மூத்தையா (வயது 37 ஐந்து பிள்ளைகளின் தந்தை, வம்பவெட்டுவான், மட்டக்களப்பு), காத்தமுத்து காளிராசா (வயது 28 திருமணமானவர், வம்பவெட்டுவான் மட்டக்களப்பு), காத்தமுத்து ராஜன் (வயது 29திருமணமானவர் வம்பவெட்டுவான் மட்டக்களப்பு), வேலுப்பிள்ளை மயில்வாகனம் (வயது 35 ஐந்து பிள்ளைகளின் தந்தை பாலசேனை மட்டக்களப்பு) ஆகியோர் கைதுசெய்யப்பட்டு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

...அமைதிப்படையின் கொடுமைகள் என்று விடுதலைப் புலிகள் வர்ணித்த சில குற்றச் சாட்டுகளும் இதற்குக் காரணமாக இருந்தன என்று குற்றப் பத்திரிகை குறிப்பிடுவதாக தெரிகிறது

திரு.வி.பி சிங் பிரதம மந்திரியாகிய பிறகு 1991 ஆம் ஆண்டு தொடக்கத்தில் தேர்தல்கள் நடக்கக் கூடுமென்று ராஜீவ் காந்தி கூறியிருந்தார்.

ராஜிவ் காந்தி ஆட்சிக்கு வந்தால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மீண்டும் அமுல் படுத்துவார் என்றுவிடுதலைப் புலிகள் கருதினார்கள் ராஜீவ் காந்தி பிரதமராவார் என்று இந்தியாவிலும் பல பத்திரிகைகள் கருத்துத் தெரிவித்தன.

இதை எப்படியாயினும் தடுப்பதற்காக விடுதலைப் புலிகள் இச் செய்லை செய்து முடித்தனர்.

1990 செப்ரெம்பரில்தான் விடுதலைப் புலிகளின் முதல்

## வீரச்சாவு

வீரச்சாவை தழுவிக் கொண்ட் மேஜர் இளங்கோ (விமல்ராஜ் - குழந்தைவடிவேல் ஜெகதீஸ்வரன், கருநாட்டுக்கேணி, கொக்குளாய்) என்பவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## ஆலயம்மீது

வழிபாட்டில் ஈடுபட்டிருந்த பெண்களும் குழந்தைகளும் உட்படப் 15 பேர்பலியானதும் ஏராளமானோர் காயமடைந்ததும்ஒரு சோகநிகழ்ச்சியாகும் என்றும் தெரிவித்துள்ளது.

எல்லாஇனங்களுக்கும் அடிப்படை உரிமைகளும், மதசுதந்திரமும், பாதுகாப்பும் உண்டென்பதைச் சுட்டிக்காட்டியிருப்பதோடு இது குறித்து உடனடியாக விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்குமாறும் பேரவை ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

1. ஆண் / பெண்
2. 01 - 06 - 1992 ல் 18 வயதிற்குக் கீழ்ப்படாமலும் 25 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்.
3. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் 1991 ல் அங்கத்தவராக இருப்பதுடன் 1992 செஞ்சிலுவை அங்கத்துவ அட்டை வைத்திருத்தல் வேண்டும்.
4. பின்வரும் பயிற்சி வகுப்பில் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.
   1. உயர்தர முதலுதவி.
   2. அனர்த்தங்களுக்குத் தயார்ப்படுத்தல்.
   3. தலைமைத்துவப் பயிற்சி
   4. ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு முதலியன.
   5. நிவாரணத் திட்டம் முதலியன.
5. நிவாரண வேலை, முதலுதவி அங்கத்துவநிதி சேகரிப்பில் கடந்த இரண்டு வருடம் ஈடுபட்டிருத்தல் வேண்டும்
6. பேச்சு, நடனம், நாடகம், இசைக்கருவிகள் இசைத்தல் ஆகியவற்றில் ஆற்றல் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
7. உடநலம் உடையவராகவும், முன்பு செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியாக வெளிநாடு செல்லாதவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆசிரியர்/(ஆதரவு) தலைவர்கள் (25 - 45 வருடம்)

1. ஆண் அல்லது பெண்
2. 01 - 06 - 92 இல் 25 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்குமேற்படாமல் இருத்தல் வேண்டும்.
3. 1991 அங்கத்தவராக இருப்பதுடன் 1992 இல் இயங்கும்/ஆயுள்/ஒருங்கிணைந்த அங்கத்துவ அட்டை வைத்திருத்தல் வேண்டும்.
4. பின்வரும் பயிற்சி நெறியில் பங்குபற்றிய தகைமை உடையவராக இருத்தல் வேண்டும்.
   அ. போதனாசிரியர் பயிற்சி, முதலுதவி;
   ஆ. அனர்த்தங்களுக்குத் தயார்ப்படுத்தல் பயிற்சி.
   இ. தலைமைத்துவப் பயிற்சி.
   ஈ. ஆரம்ப சுகாதார நிகழ்ச்சி.
   உ. நிவாரண நிகழ்ச்சி.
   ஊ. புனருத்தாரண நிகழ்ச்சி.
   எ. ஏனையவை.
5. பின்வருவனவற்றிற்கு 2 வருடத்திற்குக் குழுத் தலைவராக இருத்தல் வேண்டும். முதலுதவி, அனர்த்தங்களுக்கு ஆயத்தப்படுத்தல், தலைமைத்துவம், ஆரம்ப சுகாதாரம், நிவாரணம், புனருத்தாரண வேலைகள்.
6. பேச்சு, நடனம், நாடகம், இசைக்கருவி இசைத்தல் ஆகியவற்றில் ஆற்றல் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
7. உடநலம் உடையவராகவும், செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியாக முன்பு வெளிநாடு செல்லாதவராகவும் இருத்தல் வேண்டும்.
8. 1. விண்ணப்பங்கள் நீங்களே தயார் செய்து கீழ்வரும் முகவரிக்கு 26 - 05 - 92 க்கு முன்பு அனுப்புதல் வேண்டும்.
   2. மேற்படி விடயமாக பரீட்சை இச்சங்கத்தில் 27 - 05 - 92 மாலை 3 மணிக்கு நடைபெறும்; விண்ணப்பித்தவர்கள் மேற்படி பரீட்சையில் பங்குபற்ற வேண்டும். பரீட்சைக்கு அனுமதி அட்டையோ, கடிதமோ அனுப்பப்பட மாட்டாது.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
20 - 05 - 1992

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்.

[சி/4444]